98—

பள்ளிக் கூடம்

*__28990—திரு. து. ரவிக்குமார்:__

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, லால்பேட்டையில் மன நலம் குன்றியோருக்கான பள்ளியைத் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, லால்பேட்டையில் மன நலம் குன்றியோருக்கான பள்ளி திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் தொண்டு நிறுவனம் மன வளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளி நடத்த முன்வந்தால், அங்கீகாரம் வழங்குவதோடு போதிய உதவிகள் வழங்கிட இவ்வரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், இருக்கையில் இல்லை. மாற்றாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

திரு. கு. செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மன நலம் குன்றியோருக்கான பள்ளிகள் மொத்தம் 254 இருக்கின்றன. நமது அரசு, குரோம்பேட்டை அருகிலே சானடோரியத்திலே ஒரேயொரு பள்ளியைத்தான் நடத்துகிறது. மீதமுள்ள 253 பள்ளிகளிலே 34 ஆசிரியர்களுக்கு நம்முடைய அரசு சம்பளம் வழங்கி வருகிறது. இதேபோன்று, சம வாய்ப்புத் திட்டத்திலே 1995-லே ஒரு திட்டத்தைத் தீட்டினார்கள். அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கிறது. ஆக, இதுபோன்ற தொண்டு நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கும்—லால்பேட்டை பகுதியிலே மன நலம் குன்றியவர்கள் அதிகம் அங்கே வசித்து வருகிறார்கள்; அவர்களுக்குப் பள்ளி அமைப்பதற்கும், — ஏற்கெனவே நம்முடைய முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்கள் அறிவித்த அந்த 3 சதவிகித

2008 ஏப்ரல் 11]

இடஒதுக்கீட்டுத் திட்டத்தை, தொகுப்பு வீடுகளிலும் நாம் நிறைவேற்றுவோமா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வருடம் நமது முதல்வர் அவர்கள் கிட்டத்தட்ட 25 கோடி ரூபாயை மன வளர்ச்சிக் குன்றியோருக்கு சிறப்பு நிதியாக ஒதுக்கீடு செய்து, இரண்டு வாரங்களுக்கு முன்புதான் ஒரு விழாவின் வாயிலாக 200 சிறப்புப் பள்ளிகளுக்குத் தலா 50,000 ரூபாய், முக்கியமாக அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்காகவே வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். தொகுப்பு வீடுகளைப் பொறுத்தவரை, அது கொள்கை அளவில் எடுக்கப்படவேண்டிய ஒரு முடிவு. அதனை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

திரு. கு. செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றோர், மனநலம் குன்றியோர் ஆகியோருக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகுந்த கருணை உள்ளத்தோடு, பல்வேறு பணிகளை அறிவித்து, உதவிகளைச் செய்து வருகிற இந்த நேரத்தில், திருப்பூர் பகுதியிலே முற்றிலும் காது கேளாதோர், வாய் பேசாதவர்களுக்கென்று, ஒரு பள்ளி ஓர் அமைப்பின் சார்பிலே நடத்தப்பட்டு வருகிறது. அவர்களே முழுமையாக நன்கொடைகள் மூலமாக அந்தப் பள்ளியை நடத்தி வருகிறார்கள். தற்சமயம்கூட அந்தக் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிற காரணத்தினால், புதிய கட்டடங்கள்கூட நன்கொடை வசூலித்துக் கட்டியிருக்கிறார்கள். அவர்கள் அதைத் தொடர்ந்து நடத்துவதற்கும், அதற்கான ஆசிரியர்களுக்குத் தொடர்ந்து ஊதியம் வழங்குவதற்கும், பெரும் சிரமத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பள்ளி தொடர்ந்து நடந்து வருகிற சூழலில், அந்தக் காது கேளாத குழந்தைகளினுடைய எதிர்கால நலனுக்காக அந்த ஆசிரியர்களுக்குரிய

சம்பளத்திற்கான நிதியை அரசு உதவியாக வழங்க முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் உள்ள பேசவியலாத, காது கேளாத அந்த ஊனமுற்ற குழந்தைகள் கல்வி பெறவேண்டுமென்ற முயற்சியின் அடிப்படையில், நம்முடைய அரசு உதவியுடன் தொண்டு நிறுவனங்கள் வாயிலாக இந்தக் குழந்தைகளுக்கான பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால், அந்தத் தொண்டு நிறுவனங்கள், பணியாற்றக்கூடிய ஆசிரியப் பெருமக்களுக்கு வருடக் கணக்கில் ஊதியம் வழங்குவதில்லை, அங்கே குழந்தைகள் சரியாகப் பராமரிக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டும் மேலோங்கியிருக்கிறது. அது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? ஆகவே, தொண்டு நிறுவனங்களை வலியுறுத்தியாவது ஆசிரியப் பெருமக்களுக்குரிய ஊதியத்தை வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிற அதேவேளையில், அந்தத் தொண்டு நிறுவனங்கள் சரியாக நடத்தப்படாத சூழ்நிலையில், அதுபோன்ற பள்ளிக்கூடங்களை அரசே ஏற்று நடத்துவதற்கு அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வருடம், முக்கியமாக காது கேளாத குழந்தைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அவர்கள் முன்பருவக் கல்வி பயில சிறப்புப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருடந்தோறும் 5 இலட்சம் ரூபாய் இந்தப் பள்ளிகளுக்காக வழங்கப்பட்டு வருகிறது. நமது சட்டமன்ற உறுப்பினர் கூறியதுபோல் தொண்டு நிறுவனங்கள் சரியாக இயங்காவிடில் கண்டிப்பாக இந்த அரசு அவர்களின் licence-ஐப் பறித்து விட்டு, கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற நிதிநிலை அறிக்கையிலேயே மன நலம் குன்றியோர், ஊனமுற்றோருக்கான நல வாரியத்தை நமது அரசு அறிவித்தது. அந்த நல வாரியத்தில் உறுப்பினர் ஆவதற்கு மீண்டும் அவர்கள் அனைவரிடமும் சான்றிதழ் வாங்கி வரவேண்டுமென்று பணிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே தேசிய அளவிலான ஊனமுற்றோர் அடையாள அட்டையை அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஆகவே, அந்த அட்டையை வைத்திருப்பவர்கள் அனைவருமே நமது தமிழக அரசினுடைய ஊனமுற்றோர் நல வாரியத்தில் இணைவதற்கான தகுதி பெற்றவர்கள் என்று அறிவித்தாலே போதுமானது. ஆகவே, அது எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மீண்டும் கலந்தாலோசித்து அரசு பரிசீலிக்கும். பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கடந்த 2007-2008 ஆம் நிதி ஆண்டில் எத்தனை மன நலம் குன்றியோருக்கான பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன? இதில் பெரியோர்களுக்கான பள்ளிகள் எத்தனை, குழந்தைகளுக்கான பள்ளிகள் எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன்.

இதேபோல், நம்முடைய முத்தமிழ் அறிஞர் தமிழினத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள், தன்னுடைய பொற்கால ஆட்சியில் இந்த நாட்டில் உள்ள மன நலம் குன்றியோரைக்கூட விட்டுவைக்காமல், டாக்டர்களிடமிருந்து பெறப்படுகின்ற certificate-ல் அவர்களுடைய mental retardation 60 விழுக்காடு இருந்தது என்று சொன்னால், அவர்களுக்கு மாதம் 500 ரூபாய் உதவித் தொகை வழங்கி வருகிறார்கள். இந்த 60 விழுக்காட்டை 40 விழுக்காடாகக் குறைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2008 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வருடம் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து 30 மாவட்டங்களில் தலா ஒரு முன்பருவக் கல்விப் பள்ளி மன வளர்ச்சி குன்றியோருக்காகத் தொடங்கப்பட்டுள்ளது. அதேசமயம் 7 மாவட்டங்களில் 14 வயதுக்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகள், தொழிற்பயிற்சி, தங்குவதற்கு வசதிகள் நிறுவப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். கடந்த வருடம் முதல் உறுப்பினர் கூறியதுபோல 500 ரூபாய் வழங்கப்படுகிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் வெறும் 200 ரூபாய்தான் வழங்கப்பட்டு வந்தது. நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், 200 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தி, (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக மட்டும் 18 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, 31,000 மன வளர்ச்சி குன்றியவர்கள் பயனடைகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இத்திட்டம் நமது மாநிலத்தைத் தவிர இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப்படவில்லை என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

99—

வீட்டுமனைப் பட்டா

***20781—திரு. ந. சுப்ரமணியன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, விராலிமலை ஊராட்சி ஒன்றியம், மேபூதக்குடி ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குளத்தூர் தொகுதி, விராலிமலை ஊராட்சி ஒன்றியம், மேபூதக்குடி ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS